படுவதுடன், பட்டங்கள் ஏதேனும் வழங்கப்படுகிறதா? அதைப் பற்றி பரிசீலித்து ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அரசு உதவித் தொகை ஏதும் தருவதில்லை. அங்கு வந்து பயிலுகின்ற மாணவர்களுக்கு உண்ண உணவும், இருக்க இட வசதியும் இலவசமாகச் செய்து தருகிறார்கள். அங்கே நான்கு ஆண்டுக் காலம் பயிற்சிப் பெற்றதற்குப் பிறகு, நாதஸ்வரத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கு "நாதஸ்வர இசை மணி" என்றும், தவுலிலே பயிற்சி பெற்றவர்களுக்கு "தவுல் நாதமணி" என்றும் பட்டத்தை வழங்குகிறார்கள்.

Thanjavur Big Temple.

* 324 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government has urged the Union Government to permit the tourists visiting Thanjavur to go up to the High Tower of the Big temple; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

இராமேஸ்வரம் கோயில்

* 325 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 சனவரியில் இராமேஸ்வரம் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சுமார் 1½ இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்படுகின்றது.

1972 ஆகஸ்ட் 24]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பதன் விவரம் அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த இராமேசுவரக் கோயிலினுடைய உட்பிரகாரத்திலே சில பேர் கடைகளை வைத்திருக்கிறார்கள். அங்கே, ஒரு சிறு மெழுகு விளக்கை உட்பிரகாரத்தில் ஒருவர் உள்ளே வைத்துவிட்டுச் சென்று விட்டதால், அது கீழே விழுந்து, அந்த விளக்கின் மூலம் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனால் பக்கத்திலே இருந்த கடைகளுக்கெல்லாம் தீ பரவி, அங்கே இருக்கின்ற கோயிலின் மண்டப மும் தீயினால் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு அந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கடைகளை அப்படி உள்ளே வைத்திருக்கிற கோயில்களை "பயர் இன்சூரன்ஸ்" செய்யக்கூடிய ஒரு திட்டத்தை அறநிலைய இலாகா வைத்திருக்கிறதா? அப்படி ஒரு திட்டத்தை வைத்திருந்தால்தான் இப்படி நஷ்டம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : இதுமாதிரி நம் மாநிலத்தில் பெரிய பெரிய தேவஸ்தானங்களில் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு வருகிறது. இதற்கெல்லாம், தர்மகர்த்தாக்கள் போட்டிதான் காரணம் என்று பரவலாக மக்கள் மத்தியிலே பேசப்படுகிறது. இதுபற்றி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே. எந்தப் பழைய கோயில்களிலே அப்படிப்பட்ட தீ விபத்து ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் வசதியாக இருக்கும். வெளியே பரவலாகப் பேசப்படுகின்ற கருத்துக்களை இங்கே சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : குருவாயூரப்பன் கோயிலிலே கூட இப்படித் தீ விபத்து ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த கோயில் கேரளாவிலே இருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இராமேசுவரம் கோயிலில் நடந்த தீ விபத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக அந்த கோயிலிலே மராமத்து வேலைகள் உடனே மேற்கொள்ளப்பட்டனவா ? அதன் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உடனடியாக, தீயினால் சேதம் அடைந்த பகுதிகள் பார்வையிடப்பட்டு, திருப்பணி செய்வதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. அந்தத் திருப்பணிகள் செய்வதற்காக 2½ இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. அந்த வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இராமேசுவரம் கோயிலிலே தீ விபத்து ஏற்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தத் தீ விபத்திற்குக் காரணமாக இருந்தவர்களின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அங்கே கடை வைத்துப் பிழைப்பவர்கள் எல்லாம் சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிடத்திலே நஷ்ட ஈடு வாங்குவதோ அல்லது வேறு வித நடவடிக்கையோ எடுக்க முடியாது. எனவே, இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமானால், கோயிலுக்குள்ளே கடைகளை வைத்திருப்பதை வெளியே வைக்கும் வகையிலே அவர்களுக்கு வசதியான முறையிலே கடைகளை கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய ஒரு நடவடிக்கையை இராமேசுவரம் கோயிலிலே எடுத்து வருகிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற பிரசித்தி பெற்ற கோயில்களில் கீத்துக் கொட்டகைகள் போடப்பட்டிருப்பதால்தான் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அறநிலையத் துறை பிரசித்தி பெற்ற கோயில்களில் கீத்துக் கொட்டகைகள் போடுவதைத் தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கீத்து கொட்டகை போடப்பட்டதினால் எங்கும் தீ விபத்து ஏற்பட்ட தாகத் தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பல கோவில்களில் இன்னும் அகல் விளக்கும், எண்ணெய் விளக்கும் இருப்பதினால் தான் தீ விபத்து ஏற்படுகிறது. எனவே அவைகளை எல்லாம் மாற்றி எல்லாக் கோயில்களிலும் மின்சார விளக்கைப் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அகல் விளக்கு ஏற்றி வைப்பது என்பது ஒரு முறையாக இருந்து வருகிறது ஆகவே. அதில் தலையிடுவது என்பது இயலாது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இராமேஸ்வரம் கோவில் மிகப் பழமையானது. அங்கே தீ விபத்து ஏற்பட்டது மனித சக்தியினால் ஏற்பட்டதல்ல; தெய்வ சக்தியால் ஏற்பட்டது என்று கருதப்படு கிறது. எனவே, கடவுள் செய்கைகளைத் தவிர்த்து, கடவுள் விரும்பும் பணிகளையெல்லாம், கடவுளின் விருப்பப்படி நிறை வேற்றி வைக்கவேண்டும் என்று அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி இப்படிப்பட்ட கேள்விகள் மூலம், தான் ஒரு பழுத்த ஆஸ்திகர் என்பதை வெளிப்படுத்தி வருகிறார். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, கோவில்களுக் குள்ளே கடைகளை வைக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப் படுமா? பைபிளில் கூட

Why do you canvert my father's house into a den of robbers. என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்தெந்தக் கோவில் களில் கடைகள் உள்ளே இருக்கின்றனவோ அவைகளை மாற்றி வெளியே வைப்பதற்கும், மேலும், உள்ளே கடைகளை வைக்காமல் இருப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துதான் இந்த அரசின் கருத்தும். ஆனால் அதற்குச் சிலருடைய எதிர்ப்பு இருக்கிறது. மதுரை கோவிலில் கூட அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டபோது, அரசியல் கட்சி

களும், தனிப்பட்ட சங்கங்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதனால் அதை கைவிடவேண்டிய நிலை இருக்கிறது. இப்போது கோவில்களில் கட்டப்படும் கடைகளை வெளியே கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.*—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு

(அ) மணலி எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru N. Dennis will now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance.

THIRU N. DENNIS : I now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, i.e., fire at Manali Project on 20th July 1972 and the serious loss involved therein.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 20-7-1972 அன்று இரவு 11-30 மணியளவில் மணலியில் உள்ள சென்னை, எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டது. 25,000 டன் உயர்வகை மண்ணெண்ணெய் அடங்கிய 406-ஆம் எண் தொட்டியில் தீ பற்றியது.